இந்து தமிழ் திசை - 25/12/2022

ஜேஇஇ விண்ணப்பத்தில் 10-ம் வகுப்பு மதிப்பெண்ணை உள்ளீடு செய்வதில்

# தமிழக மாணவர்களுக்கு விலக்கு அளித்து உத்தரவு

## அரசின் கோரிக்கையை ஏற்று தேசிய தேர்வு முகமை நடவடிக்கை

● சென்னை

ஜேஇஇ முதல்நிலைத் தேர்வுக்கான இணையதள விண்ணப்ப பதிவில், தமிழக மாணவர்கள் 10-ம் வகுப்பு மதிப்பெண் உள்ளீடு செய்வதில் இருந்து விலக்கு அளித்து, தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் கரோனா பரவல் காரணமாக 2020-21-ம் கல்வியாண்டில் 10-ம் வகுப்பு பொதுத் தேர்வு ரத்து செய்யப்பட்டு, மாணவர்கள் அனைவருக்கும் தேர்ச்சி வழங்கப்பட்டது. மதிப்பெண் சான்றிதழில் 'கரோனா பேட்ச்' - 'அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி' என குறிப்பிடப்பட்டது.

இதற்கிடையே, ஐஐடி, என்ஐடி உள்ளிட்ட மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் சேருவதற்கான, ஜேஇஇ தேர்வு விண்ணப்ப பதிவில் 10-ம் வகுப்பு மதிப்பெண் உள்ளீடு செய்வது கட்டாயமாக்கப்பட்டிருந்தது.

தமிழகத்தில் தற்போது பிளஸ் 2 படிக்கும் மாணவர்களுக்கு, 10-ம் வகுப்பு சான்றிதழில் மதிப்பெண் ஏதும் வழங்கப்படாதால், ஜேஇஇ தேர்வுக்கு விண்ணப்பிப்பதில் சிக்கல் நிலவியது. இப்பிரச்சினையில் தமிழக அரசு தலையிட்டு, உடனடியாக தீர்வுகாண வேண்டும் என பெற்றோர், கல்வியாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஜேஇஇ விண்ணப்ப பதிவில், 10-ம் வகுப்பு மதிப்பெண்ணை உள்ளீடு செய்வதில் இருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என வலியுறுத்தி, தேசிய தேர்வு முகமைக்கு தமிழக பள்ளிக்கல்வித் துறை வேண்டுகோள் விடுத்தது.

இதை ஏற்று, ஜேஇஇ முதல்நிலைத் தேர்வுக்கான இணையதள விண்ணப்ப பதிவில், தமிழக மாணவர்கள் 10-ம் வகுப்பு மதிப்பெண்களை பதிவேற்றம் செய்வதில் இருந்து என்டிஏ தற்போது விலக்கு அளித்துள்ளது. இந்த தேர்வுக்கு விண்ணப்பிக்க ஜன.12 கடைசி நாள். விருப்பம் உள்ளவர்கள் துரிதமாக விண்ணப்பிக்க வேண்டும் என பள்ளிக்கல்வி துறை தெரிவித்துள்ளது.

'தமிழக மாணவர்களுக்கு விலக்கு அளித்திருப்பது வரவேற்கத்தக்கது. இதை பயன்படுத்தி, தமிழக மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் ஜேஇஇ தேர்வு எழுத வேண்டும்' என்று பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.